



"மாம்பழமே மில்லியன் ரூபாயெண்டால், மண்ணெண்ணெய் விலை முந்நூறைத் தாண்டினது அதிசயமில்லைத்தானே பிள்ளையாராப்பா"


# உதயன்

சுடர் : 37 | கதிர் : 270

செவ்வாய்க்கிழமை 23 ஒகஸ்ட் 2022

ஆவணி 07 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50


## இரண்டு ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலும் இல்லை

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 23

எதிரணியில் உள்ள ஒரு சில கட்சிகள் கூறுவது போல் தேசியரீதியில் தேர்தல் ஒன்றை இப்போதைக்கு நடத்த முடியாது. இரண்டு வருடங்களுக்கு எந்தத் தேர்தலையும் நடத்த முடியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தலையாவது நடத்தும்படி சில கட்சிகள் பரிந்துரைத்துள்ளன. அது தொடர்பில் பரிசீலித்து 11 ▶

## வசந்த முதலிகே கைது விவகாரம்; அரசைத் தொடர்புபடுத்தாதீர்

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தியதை நியாயப்படுத்துகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓக. 23

போராட்டங்களின்போது பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெற்றனவா என்பது தொடர்பில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை பயன்படுத்தியே விசாரணைகளை மேற்கொள்ள முடியும். 11 ▶



## வடக்கில் சில தினங்கள் கனமழைக்கு சாத்தியம்

### நிலப்பண்படுத்தலை ஆரம்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 23

நேற்று இரவு தொடக்கம் அடுத்து வரும் சில தினங்களுக்கு வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் 11 ▶

# ஐ.நா.வின் கோரிக்கையை தூக்கியெறிந்தார் ரணில்

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 90 நாள் தடுப்புக்காவலுக்கு அனுமதி**

**அமெ., கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உடனடி எதிர்வினை**

**ஜெனிவாவிலும் கடும் நெருக்குதல் வரலாம்**

கொழும்பு, ஓகஸ்ட் 23

ஐ.நா. விசேட அறிக்கையாளர் வேண்டுகோள் விடுத்து 24 மணி நேரத்துக்குள் அதனைப் புறந்தள்ளி – தூக்கிக் கடாசிவிட்டு, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தில் ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டுள்ளார். இது சர்வதேச சமூகத்தின் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. உடனடியாகவே இந்த நடவடிக்கைக்கு சர்வதேச சமூகமும் அதிருப்தியை எதிர்வினையாற்றியுள்ளது. 11 ▶

### யாழ். மாநகர சபையின்

## நீலப் படையணி மீண்டும் களத்தில்

யாழ்., ஓக. 23

பயங்கரவாதத் தடுப்புச் சட்ட விசாரணைக்குள்ளாகிய நீலச்சட்டைப் பணியாளர்கள் மீளவும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். நல்லூர்ப் பெருந்திருவிழாவின் இறுதி நாள்களில் அவர் 11 ▶

### நல்லூர் ஆலயச் சூழலில்

## 'கோர்ன்' ஊதிய கும்பல்; எச்சரித்து விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலில் அதிக சத்தத்தை எழுப்பும் 'கோர்ன்களை' ஊதிச் சென்ற இளைஞர் குழுவொன்றை பொலிஸார் பிடித்து, கோர்ன்களை பறிமுதல்செய்து, கடுமையாக எச்சரித்த பின்னர் விடுவித்துள்ளனர்.

ஆலயத் திருவிழாவுக்கு வருகை தருவோருக்கு அசௌ 11 ▶

## கொள்ளைச் சந்தேகநபர் தமிழகத்தில் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஓக. 23

இலங்கையில் இருந்து கடந்த இரு நாள்களில் தமிழகம் சென்று தஞ்சம் கோரியுள்ள 16 பேரில் ஒருவர் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு நாள்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் திருகோணமலையை 11 ▶

## 'கியூ ஆர்' வந்தது செலவு குறைந்தது

கொழும்பு, ஓக. 23

'கியூ ஆர்' குறியீட்டு அடிப்படையிலான தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் மாதாந்த எரிபொருள் இறக்குமதிக்கான செலவு 500 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 230 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### விஞ்ஞானபீட மாணவர்கள் இருவருக்கு

## வகுப்புத் தடை!

### பகிடிவதையால் வந்த வினை

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்கு பகிடிவதைக் குற்றச்சாட்டுக் காரணமாக மறு அறிவித்தல் வரையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவனை பல்கலைக்கழக வாயிலில் வைத்த கடந்த 2ஆம் திகதி இவர்கள் தாக்கினரெனத் தெரிவிக்கப்படுகின்றது. 11 ▶

### அத்துமீறிய மீன்பிடி

## தமிழக மீனவர்கள் 10பேர் நேற்று கைது

முல்லைத்தீவு, ஓக. 23

முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் 10 பேர் நேற்றுக் காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 11 ▶

## பிள்ளையாரின் மாம்பழம் 1 மில்லியனுக்கு ஏலம்

வவுனியா, ஓக. 23

வவுனியா மரக்காரம்பளை வீதி கணேசபுரத்தில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவத்தின் 6 ஆம் நாள் திருவிழாவின் போது கடவுளுக்கு படைக்கப்பட்ட மூன்று மாம்பழங்களும், ஒரு மாலையும் ஏலத்தில் விடப்பட்டபோது 11 ▶

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் ரணிலுக்கு நெருக்கடி இருக்கும்!

## *ஒரு பில்லியன் டொலர் தொங்குநிலை*

**கொழும்பு, ஓக.23**

**இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 27ஆம் திகதி ஜப்பானுக்குச் செல்லவுள்ள நிலையில், அங்கு நடத்தப்படவுள்ள பேச்சுக்கள் அவருக்குக் கடினமான தருணங்களாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.**

ஜப்பான் இடைக்கால நிதியுதவிக்காக ஒரு பில்லியன் டொலரை ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆனால், அண்மைய சம்பவங்கள், அந்தத் தொகை இலங்கைக்குக் கிடைப்பதற்கு நெருக்கடியைக் கொடுக்கும் என்று கருதப்படுகின்றது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வந்த ஜப்பானிய நிறுவனமான தாய்சே நிறுவனத்திடம் 100 மில்லியன் ரூபா லஞ்சம் கோரப்பட்டது என்று நிமல் சிறிபால டி சில்வா மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

அவரை மீண்டும் அமைச்சரவையில் உள்வாங்கியமையிலும் ஜப்பான் அதிருப்தியிலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூர் அரசியல்வாதிகள் லஞ்சம் கோருவது தொடர்பான அறிக்கைகள் பல மேற்குலக அரசாங்கங்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு தூண்டுகின்றன.

இது சர்வதேச நாணய நிதியத்தின் கவனத்தையும் ஈர்க்கும் ஓர் அம்சமாகவும் உள்ளது என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (எ-இ)

# அமைச்சுகளை ஏற்க மீண்டும் ஐ.ம.ச.மறுப்பு

கொழும்பு, ஓக.23


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் மற்றுமொரு சுற்று பேச்சு நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில், அமைச்சுகளை பொறுப்பேற்க வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மீண்டும் ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் நாடாளுமன்ற முறைமையின் கீழ் எதிர்க்கட்சியில் இருந்து அரசாங்கத்தின் பிரேரணைகளை ஆதரிக்க எதிர்க்கட்சி தயாராக உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சுப் பதவிகள் நாட்டுக்கு சுமையாக மாறியுள்ளன என்றும், அமைச்சுப் பதவிகளுக்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்றும் கட்சியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறுபுறம் அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை ஏற்றுக்கொண்டால் அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது எனவும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் எதிர்க்கட்சியாக இருந்து அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முடியும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர். (எ-இ)



# பயங்கரவாதத் தடைச்சட்ட கைதுகளில் கண்காணிப்பு

## *ஐரோப்பிய ஒன்றியம் கரிசனை*

கொழும்பு, ஓக.23

சிறிலங்கா அரசாங்கம் அண்மைய கைதுகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்தியுள்ளமை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கரிசனை வெளியிட்டுள்ளது.

அண்மைய கைதுகளில் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாகக் கரிசனை கொண்டுள்ளோம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தனது டுவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை தற்போது பயன்படுத்துவதில்லை என சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய தகவலை ஆராய்ந்து வருகின்ற தருணத்தில், பயங்கரவாத தடைச் சட்டம் கைதுகளில் பயன்படுத்தப்படுவது தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# சர்வகட்சி அரசு சரிவராதுவிடில் புதிய அமைச்சரவை அவசியம்!

## *பஸில் ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.23

இராஜாங்க அமைச்சர்கள் நியமனத்தை துரிதப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பொதுஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளது எனக் கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சர்களாக இருந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு பெரமுன ஜனாதிபதிக்கு கட்சி கால அவகாசம் வழங்கும். அனைத்துக் கட்சி அரசாங்கமும் யதார்த்தமானதாக இல்லாவிட்டால் புதிய அமைச்சரவையை கூடிய விரைவில் நியமிக்க வேண்டும் என பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (எ-இ)

# மே9 வன்முறைகளை விசாரிக்க தனிக்குழு

## *சுயாதீன எம்.பிக்கள் கோரிக்கை*

கொழும்பு, ஓக. 23

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி முதல் ஜூன் 12 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள், அவற்றுக்கான காரணங்கள் மற்றும் அதன் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார். (ம-14-இ)

# வத்திக்கான் செல்கின்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித்!

கொழும்பு, ஓக. 23

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எதிர்வரும் 24ஆம் திகதி மீண்டும் வத்திக்கானுக்குச் செல்லவுள்ளார். பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸின் அழைப்பின் பேரில் அவர் அங்கு செல்கின்றார் என்று கூறப்படுகின்றது.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வருகையை பாப்பரசர் கட்டாய சுற்றுப் பயணமாக அறிவித்துள்ளார் என்று கத்தோலிக்க சபையின் பேச்சாளர் ஒருவர் தெற்கு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி கர்தினால்களை நியமிக்கும் நிகழ்வில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் பங்கேற்கவுள்ளார். (எ-இ)

# ஐ.எம்.எப். உடன்படிக்கை: ஆதிக்கம் செலுத்தும் சீனா!



கொழும்பு, ஓக.23

இலங்கையின் இருதரப்புக் கடனில், பாதியளவான கடன் சீனாவிடமிருந்து பெறப்பட்டுள்ள நிலையில், சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துக்கு பீஜிங்கின் நிலைப்பாடு தொடர்பான முக்கியமான நகர்வுகள் இந்த வாரம் முன்னெடுக்கப்படவுள்ளன.


நிதி அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ, கடன் விளக்கத்தின்படி, இலங்கையின் இருதரப்புக் கடனில் பாதி அளவு கடன் சீனாவிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. அதனால் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சீனாவின் நிலைப்பாடு, சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான இலங்கையின் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிதி அமைச்சின் கடன் கொடுத்தோர் புதுப்பிப்பின்படி, இலங்கையின் மொத்த இருதரப்புக் கடன் 10 பில்லியன் டொலராகும். கடந்த ஆண்டு இறுதி வரை இதில் 44 சதவீதம் சீனாவிடம் இருந்து கடன் வாங்கப்பட்டிருந்தது, அடுத்ததாக ஜப்பான் 32 சதவீதத்திலும், இந்தியா 10 சதவீதத்திலும் உள்ளன.

சர்வதேச நாணய நிதிய குழுவின் ஒப்புதலை அடைவது மிகவும் முக்கியமானது. இதற்கு முன்னர், கடன் கொடுத்தவர்களுடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதே இறுதிக் கட்டமாக இருக்கும்.

இந்தநிலையில் பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள் நாளை கொழும்புக்கு வரவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிர்ணய விலையில் முட்டை இல்லை!

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 23

முட்டைக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டபோதும் யாழ். மாவட்டம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் தற்போது 55 ரூபா முதல் 65 ரூபா வரையே முட்டை விற்பனை செய்யப்படுகிறது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

நுகர்வோர் விவகார அதிகார சபையால் வெள்ளை முட்டை 43 ரூபாவாகவும் சிவப்பு முட்டை 45 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்து வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது. ஆயினும் யாழ். மாவட்டம் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் நிர்ணய விலையை மீறி 55 ரூபா முதல் 65 ரூபா வரையே முட்டை விற்பனையாகின்றது.

நாட்டில் மக்கள் நலன்கருதி வெளியிடப்படும் எந்தவொரு அறிவுறுத்தல்களையும் வர்த்தகர்கள் பின்பற்றுவதில்லை.

அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலையை அதிகரிக்கும்போது மாத்திரம் வர்த்தகர்கள் உடன் விலையை அதிகரிக்கின்றனர்.

விலை குறைப்பு செய்யப்படும்போது வர்த்தகர்கள் அதனைக் கண்டுகொள்வதில்லை. ஆகவே இதுதொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் உடன் கடும் நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வு வழங்கவேண்டும் - என்றனர். (ச)

# மண்ணெண்ணெய் மானியத்தை அரசு உறுதிப்படுத்தல் வேண்டும்

## எரிசக்தி அமைச்சரிடம் மனோ கோரிக்கை

கொழும்பு, ஓக. 23

**மண்ணெண்ணெய் மானியத் திட்டம் மலைநாட்டு பெருந்தோட்டங்களில் வாழும் பின்தங்கிய மக்களுக்கும், கொழும்பில் வாழும் பின்தங்கிய குடியிருப்பு மக்களுக்கும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் மனோ கணேசன் தெரிவித்ததாவது:-

மண்ணெண்ணெய் விலையேற்றத்தைச் சமாளிக்கும் வகையில் குறைவருமான மக்களுக்குப் பணக் கொடுப்பனவை நேரடியாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தினசரி வாழ்வாதாரத் தேவைக்காக மண்ணெண்ணெய் பயன்படுத்தும் மக்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்குவது வரவேற்கத்தக்கது.

இந்த நிவாரண மண்ணெண்ணெயைத் தினசரி பயன்படுத்தும் மலைநாட்டுப் பெருந்தோட்டங்களில் வாழும் பின்தங்கிய மக்களுக்கும், கொழும்பு நகரில் வாழும் பின்தங்கிய குடியிருப்பு மக்களுக்கும் வழங்கப்படுவதைக் கட்டாயமாக உறுதிப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். (எ-இ)

# பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் பொதுமக்களின் குரல் நசுக்கல்!

## டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

அவசரகாலச் சட்டம் இல்லாத நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி, அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் அதிருப்தியை நசுக்கும் திட்டம் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:- இதுபோன்ற முயற்சிகள் ஆரம்பத்திலேயே தடுக்கப்பட வேண்டும். சிவில் சமூகத்துக்குப் பாதகமான இவ்வாறான எச்சரிக்கைகளை இனங்கண்டுகொள்ளாமையின் விளைவுகள் வரலாற்றில் காணப்படுகின்றன -என்று அவர் அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# மண்ணெண்ணெய் விலையால் மீன்களின் விலையும் உயரும்!

## வியாபாரிகள் தெரிவிப்பு

மண்ணெண்ணெய் விலை உயர்வால் மீன்களின் விலை கடுமையாக உயரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிப் படகுகள் பெரும்பாலும் மண்ணெண்ணெயை எரிபொருளாகப் பயன்படுத்துகின்றன. தற்போது மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு 253 ரூபா அதிகரிக்கப்பட்டதால், இந்த விலை உயர்வு மீன்களிலேயே ஈடுசெய்யப்படும் என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு விலை நிவாரணம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். மீனவர்கள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் மண்ணெண்ணெயில் வேலை செய்பவர்களுக்கும் விலை நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# சிறுபோகச் செய்கைக்கு டீசல் பெற்றுத்தாருங்கள்

## கிளிநொச்சியில் விவசாயிகள் போராட்டம்

கிளிநொச்சி, ஓக. 23

சிறுபோக அறுவடைக்கு டீசல் பெற்றுத் தருமாறு கோரி கிளிநொச்சியில் நேற்று விவசாயிகள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலரிடம் இதுதொடர்பில் மனுவொன்றையும் கையளித்தனர்.

அந்த மனுவில், சிறுபோக அறுவடைக்கான எரிபொருள் கிடைக்கப்பெறாமையால் அறுவடை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. சிறுபோக செய்கையை முழுமையாக நிறைவு செய்ய முடியாத விவசாயிகள், காலபோக செய்கை தொடர்பில் பரிசீலிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆகவே அறுவடைக்குரிய எரிபொருளை வழங்க அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். இதுதொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட தரப்புகளுடன் பேசி விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மேலதிக மாவட்டச் செயலர் விவசாயிகளிடம் உறுதியளித்தார். (ச-இ)

# பிளாஸ்ரிக் பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும்!

## உற்பத்தியாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

பொலித்தீன் இறக்குமதி நிறுத்தப்பட்டதன் காரணமாக அரிசி மற்றும் மரக்கறிப் பைகள் உற்பத்தி மற்றும் கொரோனா பாதுகாப்பு உடைகள் உற்பத்தி முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 4 மாதங்களாக பொலித்தீன் மணிகள் இறக்குமதி நடைபெறவில்லை என்றும், விரைவில் வெளிச்சந்தையில் பிளாஸ்ரிக் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் 200 முதல் 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பொலித்தீன் மணிகள் தற்போது ஆயிரத்து 250 முதல் ஆயிரத்து 500 ரூபாவரை அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் பொலித்தீன் மணிகள் இறக்குமதி செய்யப்படவில்லை. பொலித்தீன் மணிகள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு, சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள் மூடல் போன்ற காரணங்களால் ஏற்கனவே பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்று தொழில்துறையினர் கூறுகின்றனர்.

கொரோனா பேரிடரை எதிர்கொள்ள சுகாதார ஊழியர்களுக்குத் தேவையான கொரோனா பாதுகாப்பு உடைகள் பொலித்தீன் மணிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன என்றும், எதிர்காலத்தில் நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று ஏற்பட்டால், அதற்குத் தேவையான பாதுகாப்பு உடை உற்பத்தி முற்றிலும் நிறுத்தப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான

# மாணவ செயற்பாட்டாளர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்

## மன்னாரில் மக்கள் போராட்டம்




**மன்னார், ஓக. 23**

**பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர் செயற்பாட்டாளர்களை பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்துவைக்க வேண்டாம் என வலியுறுத்தி மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**

அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தை வழிநடத்திய மாணவ பிரதிநிதிகள், பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே, அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி மன்னாரில் போராட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:

ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம் ஆகியன அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் ஆகும். இந்த உரிமையைப் பயன்படுத்தியே பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்களும், சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களும் தமது கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு வெளிப்படுத்தினார்கள். அவர்கள் வன்முறையில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் எவையும் இல்லை. தொழிற்சங்க நடவடிக்கைகளும் வெகுஜனப் போராட்டங்களும் பயங்கரவாத நடவடிக்கைகள் அல்ல.

மாணவ செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. எனவே பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கவேண்டாம் எனக் கோருகின்றோம்.

இலங்கையின் வடக்கு- கிழக்கைச் சார்ந்த சிறுபான்மைத் தமிழர்களான நாம், தற்போதும் கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மனிதத் தன்மையற்ற துன்புறுத்தலை இன்றுவரை அனுபவித்து வருவதோடு, அந்தச் சட்டத்தின் காட்டுமிராண்டித்தனமான சுபாவத்தினை நேரடியாக எதிர்கொண்ட அனுபவங்களும் எமக்கு உண்டு.

இளம் வயதில் கைதுசெய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்கள் 30 - 40 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்தை சிறையில் கழித்து வருகின்றனர். சிலர் வெளிச்சத்தைக் காணாது சிறைக்குள்ளேயே மாண்டு போயினர்.

இலங்கையில் சிறுபான்மை மக்களான எம்மை பொறுத்தவரையில், இந்த நாட்டில் எவரும் இனிமேல் பயங்கரவாதத் தடைத்தட்டத்தின் கீழ் விசாரிக்கப்படக்கூடாது என்பதே நிலைப்பாடு. ஆதலால், மாணவ செயற்பாட்டாளர்களை உடனடியாக அரசாங்கம் விடுவிக்க வேண்டும் - என்றனர். (ம-60)

# வெடிக்காத நிலையில் பளையில் மிதிவெடி!

சாவகச்சேரி, ஓக. 23

பளை- இ[illegible]திராபுரம் பகுதியிலுள்ள வீட்டுக் காணியொன்றி[illegible]ருந்து மிதிவெடி ஒன்று நேற்றுமுன்தினம் மீ[illegible]கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டின் முற்றத்தில் குழிதோண்டி விளையாடிக் கொ[illegible]டிருந்த சிறுமி வித்தியாசமான பொருளை அவ[illegible]னித்த நிலையில் பெற்றோருக்கு தெரியப்படுத்தியதையடுத்து பெற்றோர் வெடிபொருள்கள் அகற்றும் பிரிவினருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வெடிபொருள் அகற்றும் பிரிவினர் வெடிக்காத நிலையில் இருந்த குறித்த மிதிவெடியை மீட்டனர். (ச-9)

# நாய்களுக்கு கருத்தடை

சாவகச்சேரி, ஓக. 23

தென்மராட்சிப் பிரதேசத்தில் வளர்ப்பு பெண் நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளும் பணிகள், பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைய கொடிகாமம் பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமையும் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளை புதன்கிழமையும் நாய்களுக்குக் கருத்தடை மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-14-9)

குடாக்கனையில்

# பனங்குற்றி கடத்தல் சந்தேகநபர் கைது



யாழ்ப்பாணம், ஓக. 23

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் குடாக்கனை பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் பனைமரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம்-குடாக்கனை பகுதியில் சட்டவிரோதமாக பனைமரக்குற்றிகளை ஏற்றிச் செல்வதாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த [illegible] கொண்ட நடவடிக்கை களிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ம-[illegible]-128)

ஓம்
விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பு



கடந்த 03.09.2021 வெள்ளிக்கிழமை, 07.09.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தந்தை , தாய்
அமரர் கார்த்திகேசு சித்திரவடிவேலு
(ஓய்வுநிலை பேராசிரியர் விலங்கியற்துறை – யாழ்.பல்கலைக்கழகம்)
அமரர் தவமலர் சித்திரவடிவேலு
அவர்களினது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று 23.08.2022 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவிலும் 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவிலும் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னார்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
சன்னதி வீதி,
தம்பாலை, அச்சுவேலி
குடும்பத்தினர்.
0044 7973 139276

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஏமாற்றுவது மட்டுமல்ல, ஏமாறுவதும் குற்றமே!

இப்போதெல்லாம் வடக்கு மாகாணம் இலங்கையின் அமைச்சர்களுக்கு மிகவும் பிடித்துப்போன இடமாக மாறிவிட்டது. கடந்த வாரம் மட்டும் இரண்டு அமைச்சர்கள் வடக்கு மாகாணத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளனர். கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வடக்குக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மீண்டும் கொழும்புக்குத் திரும்புவதற்குள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு துறைசார் விடயங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட கலந்துரையாடல்கள் மற்றும் பரிசீலனைகளை மேற்கொண்டுள்ளார்.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பர். அதுபோல், பேரினவாதத்துக்குள் ஊறித் திளைத்ததே இவர்களின் வருகையும். மேற்படி அமைச்சர்களின் வருகை, இலங்கையில் சீரான வளப்பங்கீட்டை மேற்கொள்வதற்காகவோ, அபிவிருத்திப் பணிகளை துரிதகதியில் மேற்கொள்வதற்காகவோ, பரந்துபட்ட திட்டங்களை மேற்கொள்வதற்காகவோ இருந்தால் இந்தச் சுற்றுப் பயணங்கள் உண்மையில் மெச்சப்பட வேண்டியவைதான். ஆனால், மேற்குறித்த காரணங்களுக்காக இந்த அமைச்சர்கள் வடமாகாணத்துக்கு – குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்லவில்லை. அப்படியானால் அமைச்சர்களின் இந்தத் திடீர் திக்விஜயத்தின் பின்னணி என்ன?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வு செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த அமர்வில் இலங்கையின் விவகாரங்களில் ஐ.நா. நிச்சயம் இறுக்கமான போக்கையே வெளிப்படுத்தும். குறிப்பாக, வலிந்து காணாமலாக்கப்பட்ட விவகாரம் மற்றும் பொறுப்புக்கூறல், தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்ட பேண்தகு அபிவிருத்திகள் தொடர்பில் இலங்கை மீது இம்முறை சிறப்புக் கவனம் செலுத்தப்பட வாய்ப்பிருக்கின்றது. இப்படியொரு பின்னணியில்தான் 'அரசாங்கம், தமிழ் மக்கள் மீது கரிசனையோடு இருக்கிறது. அவர்களின் பிரச்சினைகளை அடிக்கடி அமைச்சர்களை அனுப்பி, கேட்டறிந்து தீர்த்துவைக்கின்றது' என்று ஐ.நா.வுக்கு படம் காட்டத்தான் அமைச்சர்களின் வருகை அடுத்தடுத்து வடக்கில் நிகழ்ந்திருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் இலங்கையில் முகாமிட்டு, போரால் பாதிக்கப்பட்டவர்களையும், காணாமலாக்கப்பட்ட உறவுகளை கடந்த இரண்டாயிரம் நாள்களாகத் தேடிப் போராடிவருபவர்களையும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அனுதினம் குரலெழுப்பி வரும் தரப்பினரையும் சந்தித்து – ஆழமான கரிசனையுடன் கூடிய கலந்துரையாடலை நடத்திவரும் சமநேரத்தில், 'தமிழர் தாயகத்தில் நாம் மிகுந்த ஈடுபாட்டுடன் இருக்கின்றோம். அங்கு நிலைபேறான அபிவிருத்திகளை மேற்கொள்வதே ரணில் அரசாங்கத்தின் விருப்பம்' என்ற விம்பமொன்றை அவசர அவசரமாக கட்டியமைக்க இப்போதைய அரசாங்கம் முயல்கின்றது.

ஐ.நா. அமர்வுகள் இடம்பெறும்போது, இவ்வாறான மடைமாற்றச் செயற்பாடுகளை கொழும்பு வெளிப்படுத்துவது இதுவொன்றும் முதல்முறையுமல்ல, இத்துடன் இது முடிந்துவிடப்போகும் விடயமுமல்ல. தமிழர்களும் இதனை நன்கு அறிவார்கள். இந்தப் புரிதலும் தெளிதலும் சர்வதேசத்துக்கும் ஏற்படவேண்டும் என்பதுதான் தமிழர்களின் தற்போதைய வேணவா. தமிழர்களுக்கு நீதிதேடும் விடயத்தில் கொழும்புக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை எடுக்காத பட்சத்தில், தற்போது இடம்பெற்றுவரும் மடைமாற்றல் நடவடிக்கைகள் 'பருவகாலச் செயற்பாடுகளாக' அடுத்தவருடமும் இடம்பெறவே செய்யும். இன்னும் எத்தனை காலம்தான் ஐ.நா.வும், இலங்கை அரசாங்கத்தின் ஏமாற்று நாடகங்களுக்கு எடுபடப்போகின்றது? ஏமாற்றுவது மட்டுமல்ல, ஏமாறுவதும் குற்றமே.

நாளொரு நல்வார்த்தை

"வயது செல்லச் செல்ல தோல் சுருங்குகிறது; ஆனால் மகிழ்ச்சியை விட்டு விட்டால் வாழ்வே சுருங்கி விடுகிறது"
- சாமுவேல் ஸ்மைல்ஸ்




# கோத்தாபயவின் முடிவுகளே நெருக்கடிகளுக்குக் காரணம்!

## அனைத்தும் முடிந்தபின் வாய்திறக்கின்றார் பீரிஸ்



**கொழும்பு, ஓக.23**
**முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனிப்பட்ட முடிவுகளை எடுத்ததாலேயே நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கோத்தாபய ராஜபக்ச தனிப்பட்ட முடிவுகளை எடுத்தார். குழுவாக முடிவு எடுக்கப்படவில்லை. அதில் உரவிவகாரமும் ஒன்று. விடயம் தெரிந்தவர்களிடம் ஆலோசனை கேட்கவில்லை. இவ்வாறான அவரின் முடிவுகள் நாட்டுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தின. சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லாததும் இதேபோன்ற பிரச்சினையாகும். இத்தகைய எடுத்துக்காட்டுகள் முடிவற்றவை மற்றும் எண்ணற்றவை. ஆனால் நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரம் தேவைப்பட்டது. அதைத்தான் டலஸ் தலைமையில் செய்ய முயற்சித்தோம். கடந்த சில வருடங்களில் அமைச்சரவை முறைமையும் விலக்கப்பட்டிருந்தது.
ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க கட்சி விவாதம் மூலம் தீர்மானம் எடுக்கவில்லை. பொதுச் செயலாளரால் பதில் சொல்ல முடியவில்லை. கட்சியில் உள்ள ஒருவரின் தனிப்பட்ட கருத்தின்படி அந்த முடிவு எடுக்கப்பட்டது. ஒரு கட்சி அப்படி நடந்து கொள்ள முடியாது - என்றார். (எ-இ)

# சிறிலங்காவுக்கு உதவ பல நாடுகள் தயாராம்!

கொழும்பு, ஓக.23
சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெறவுள்ள கலந்துரையாடல்களின் பின்னர் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கு அமையப் பல நாடுகள் சிறிலங்காவுக்கு ஆதரவு வழங்கத் தயாராக உள்ளன என்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.
அவிசாவளையில் நடந்த நிகழ்வொன்றில் பங்குபற்றிய பிரதமர், அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.
சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இந்த வாரம் நாட்டுக்கு வரவுள்ளனர். அவர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த பிரதமர், அதன் மூலம் எட்டப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பல நாடுகளிடம் இருந்து உதவிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.
அதேவேளை, உள்நாட்டு ரீதியாக பணவீக்கத்தில் ஏற்படுகின்ற தாக்கத்தைக் குறைப்பதற்காக எதிர்வரும் காலங்களில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம் என இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி சுஜிதா ஜெகஜீவன் தெரிவித்துள்ளார்.
(எ-இ)

நாளை 24.08.2022 புதன்கிழமை ஆவணி 08
சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம்: 12.05 - 01.35
நல்லூர் கந்தசுவாமி சப்பறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகவாதிகளுக்கு பயங்கரவாத முத்திரை!

## எதிர்க்கட்சித் தலைவர் சீற்றம்



**கொழும்பு, ஓக. 23**

**நியாயமாகப் போராட்டம் நடத்துபவர்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் ஜனநாயகப் போராட்டங்களுக்கான உரிமையை அரசாங்கம் மறுத்துள்ளது என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்திய வசந்த முதலிகே உள்ளிட்டோர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, தடுப்புக் காவல் உத்தரவின் பிரகாரம் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இது மிலேச்சத்தனமான விடயமாகும். அரச மிலேச்சத்தனம், அரச பயங்கரவாதம் மற்றும் அரச வன்முறைகளை முற்றாக எதிர்க்கின்றேன். இந்த நாட்டில் உள்ள எந்தவொரு மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும் நான் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.

அனைத்து மக்களும் ஓரணியில் நின்று விரட்டியடித்த ராஜபக்சக்களை மீண்டும் களத்துக்குக் கொண்டுவருவதற்கான முனைப்புகள் தற்போது இடம்பெறுகின்றன. ராஜபக்சக்களின் துணையுடன் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் இந்த முயற்சிகளில் தீவிரம் காட்டுகின்றனர் -என்றார். (ம)

# மருந்துத் தட்டுப்பாடு மூவர் குழு நியமனம்

கொழும்பு, ஓக.23

நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாக ஆராய்வதற்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மூவரடங்கிய குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்தத் தொழில்நுட்பக் குழுவினூடாக, மருந்துத் தட்டுப்பாட்டுப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான உதவியை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியகுழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார். (எ-இ)



# புகைக்குண்டு பாவிக்க சிறிலங்காவுக்கு தடை?

சிறிலங்காவில் போராட்டங்களை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தும் கண்ணீர் புகைக் குண்டுப் பாவனையை நிறுத்த வேண்டும் என்று சர்வதேச ரீதியில் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் இடம்பெற்று வரும் போராட்டங்களை ஒடுக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட கண்ணீர்ப் புகைக்குண்டுகளில் கண்களுக்கு தீங்கு விளைவிக்கும் நச்சு இரசாயனம் உள்ளது என்று சபை தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்குவதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறைந்த பட்ச சக்தி என்று கூறி போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தும் வகையில் பொலிஸார் செயற்படுகின்றனர்.. அதேநேரம் பல போராட்டக்காரர்கள் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சினால் மயக்கமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே சிறிலங்காவில் கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகத்தைத் தடை செய்ய வேண்டும் என்று சர்வதேச சமூகம் அறிவித்தல் விடுத்துள்ளது. (எ-இ)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு

அம்பலாங்கொடை தெல்துவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்துவ பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மேல் மாடியில் தங்கியிருந்த 5 பேர் மீது இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த இருவர் சிகிச்சைக்காக அம்பலாங்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஆபத்தான நிலையில் இருந்த அவர்களில் ஒருவர் உயிரிழந்தார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. அம்பலாங்கொடை பிரதேசத்தில் முன்னர் இடம்பெற்ற கொலை தொடர்பாகவே, இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# ‘கோத்தா கோ கம’ பிரான்ஸ் கிளை ஏற்பாட்டாளர் கைது

கொழும்பு, ஓக. 23

‘கோத்தா கோ கம’ ஆர்ப்பாட்டத்தை பிரான்ஸில் ஏற்பாடு செய்த நபர், இலங்கைக்கு வருகைதந்தவிடத்தில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் குடியுரிமை பெற்ற அர்ஜுன என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் தனது குடும்பத்தவர்களைப் பார்ப்பதற்காக இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த வேளை நிட்டம்புவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-14-இ)

# சர்வகட்சியில் அமைச்சுக்களை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்காது

## ஹர்ஷண ராஜகருணா எம்.பி. திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 23

சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதோ அல்லது அமைச்சுப்பதவிகளை ஏற்கும் எண்ணமோ எமக்கு இல்லை. ஆனால் அரசாங்கத்தின் நல்ல வேலைத்திட்டங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியில் எவரும் இந்த அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகளை ஏற்கப் போவதில்லை. நாடாளுமன்ற தெரிவுக்குழுக்கள் ஊடாக அரசாங்கத்தின் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

அதைவிடுத்து அமைச்சுப்பதவிகளை ஏற்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

அடக்குமுறைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்துக்கு எவ்வாறு ஒத்துழைப்புக்களை வழங்குவது? நாம் எதிர்க்கட்சி என்ற ரீதியில் எமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளை, அரசாங்கத்தின் சிறந்த திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவோம் -என்றார். (ம-14-இ)

# சர்வகட்சி அரசு இல்லையெனில் பொதுத் தேர்தலை நடத்துங்கள்!

## முருந்தெட்டுவே ஆனந்த தேரர் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 23

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசியல்வாதிகள் முதலில் நாட்டு மக்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். ஆனால் தற்போது அரசியல்வாதிகள் அமைச்சுப் பதவிகளுக்காகப் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாவிட்டால் பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாடு மிக மோசமான சமூக பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

உலகில் பெரும்பாலான நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போதும் அந்த நாட்டு அரசியல்வாதிகள் அரசியல் கட்சி பேதங்களைத் துறந்து பொதுக் கொள்கையின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பியுள்ளார்கள். ஆனால் இங்குள்ள அரசியல்வாதிகள் நெருக்கடியான சூழ்நிலையிலும் அமைச்சுப் பதவிகளுக்குப் போட்டியிடுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முனைய வேண்டும்.

அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிடின் தமக்கான அரசாங்கத்தைத் தெரிவு செய்ய மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது சாத்தியமற்றதாயின் பொதுத்தேர்தலை உடன் நடத்த வேண்டும்-என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாய் மக்களுக்கு 10 கிலோகிராம் பசளை!

## வலி.தென்மேற்கு பிரதேசசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 23

**கல்லுண்டாயில் வசிக்கும் 80 குடும்பங்களுக்கு, வீட்டுத்தோட்டத்தை விருத்தி செய்யும் வகையில் மாதாந்தம் 10 கிலோ சேதனப்பசளை வழங்குவதற்கு வலி.தென்மேற்கு பிரதேசசபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை சபையின் பிரதான மண்டபத்தில் தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த சபையின் தவிசாளர் ஜெபநேசன், எமது பிரதேசசபையின் சேதனப்பசளை உற்பத்தி நிலையம் தற்பொழுது கல்லூண்டாய்வெளிப் பகுதியில் சிறப்பாக இயங்கி வருகிறது. இவ்வாறு ஒரு நிறுவனம் திறம்பட இயங்கும் பொழுது அதை சூழவுள்ள பிரதேச விருத்திக்கும் நாம் பங்காற்ற வேண்டும்.

இதைக் கருத்தில் கொண்டு குறித்த பகுதியில் வசிக்கும் 80 குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டத்தை விருத்தி செய்வதற்கு மாதாந்தம் 10 கிலோ சேதனப் பசளை வீதம் வழங்கலாம். இதன் மூலம் குறித்த பகுதியில் பயிர்செய்கைகளை ஊக்குவிக்கவும் முடியும்.

இதேவேளை கல்லுண்டாயில் குடிதண்ணீர் விநியோகப் பிரச்சினைகள் தொடர்ச்சியாக உள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று சபையின் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டமைக்கு அமைய விரைவில் குடிதண்ணீர் விநியோகப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் - என்றார். (ம-14,125)



## மானிப்பாய் – காரைநகர் வீதி தற்காலிக சீரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 23

மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியின் சீரமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் காரைநகர் வீதியைக் காப்பெற் வீதியாகப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்த நிலையில், நாட்டின் அரசியல் குழப்பங்கள் மற்றும் பொருளாதாரத் தளம்பல் நிலை காரணமாக வீதிச் சீரமைப்புகள் இடைநடுவே நிறுத்தப்பட்டன.

இதனால், குண்டும் குழியுமாகக் காணப்பட்ட குறித்த வீதியால் பயணிக்க முடியாத நிலையில், வீதியை தற்காலிகமாகச் சீரமைத்துத் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் பொதுமக்கள் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். அத்துடன் வலி.தென்மேற்கு பிரதேசசபையும் தற்காலிக சீரமைப்பை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு கோரியிருந்தது.

இந்த நிலையில் மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியின் சீரமைப்புப் பணிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-14,125)

### காரைநகர் -வட்டுக்கோட்டை

## 786 வழித்தட வீதியை சீரமைக்க கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஓக. 23

காரைநகர் - வட்டுக்கோட்டையின் 786 வழித்தட வீதியை சீரமைத்துத் தருமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியில் பெரும்பாலான பகுதிகள் புனரமைக்கப்படாத நிலையில் பள்ளங்களுடன் காணப்படுகின்றன. இதனூடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த வீதியை விரைவில் சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

## முன்பள்ளிகளுக்கு மட்டுமே சபையின் மண்டபம் இலவசம்

### வலி. மேற்கு பிரதேசசபையில் தீர்மானம்



யாழ்ப்பாணம், ஓக. 23

வலி. மேற்கு பிரதேசசபையின் பிரதான மண்டபத்தை முன்பள்ளிகளுக்கு மட்டுமே இலவசமாக வழங்க வேண்டும் எனவும் அரசியல் சார்ந்த மற்றும் குறித்த நிகழ்வுகளின் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு கட்டணம் அறவிட முடியுமாயின் கட்டணம் அறவிட வேண்டும் என்றும் அண்மையில் இடம்பெற்ற சபையின் அமர்வில் வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து இனிவரும் காலங்களில், முன்பள்ளிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு கட்டணம் அறவிடுவது என்றும், இதன்படி மூன்று மணித்தியால நிகழ்வுக்கு 3 ஆயிரம் ரூபாவும், அரைநாள் நிகழ்வுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், முழுநாள் நிகழ்வுக்கு 15 ஆயிரம் ரூபாவும் அறவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-125)



## முன்னாள் எம்.பி. சிவமகாராஜாவின் நினைவுதினம் தெல்லிப்பழையில்

யாழ்ப்பாணம், ஓக. 23

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராஜாவின் 16ஆவது ஆண்டு நினைவுதினம், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அண்மையில் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது சிவமகாராஜாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன்பின்னர் கூட்டுறவாளர் கௌரவிப்பு, பணியாளர் கௌரவிப்பு, விருது வழங்கல் ஆகியன இடம்பெற்றன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-14-20)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பொருள் சேர்க்கை உண்டாகும். ஆதாயமான நாள். எதிர்பாராத .லாபம் உண்டாகும். பணவரவால் கடனை அடைத்து நிம்மதி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்:** கவனமாக செயற்படுவது நல்லது. புதிய முதலீட்டை தவிர்க்கவும். பேச்சில் நிதானம் தேவை. முயற்சி நிறைவேறும். வரவு செலவுகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** நெருக்கடியை சமாளித்து சாதிப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய சிந்தனை மேலோங்கும். மன அழுத்தம் குறையும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவு உண்டாகும். பயணம், வரவு செலவில் எச்சரிக்கையும் கவனமும் தேவை. வழக்கு சாதகமாகும். செலவு அதிகரித்தாலும் முயற்சியால் முன்னேறுவீர்கள்.

**சிம்மம்:** வருமானத்தில் இருந்த தடை விலகும். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். நண்பரால் நன்மை அதிகரிக்கும். நீண்ட நாள்களாக வராமல் இருந்த பணம் வரும்.

**கன்னி:** பணியாளர்கள் அதிகாரிகளின் பாராட்டை பெறுவர். உழைப்புக்குரிய மரியாதை உண்டாகும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். வியாபாரத்தில் இருந்த [illegible] நினைத்ததை சாதிப்பீர்கள்.

**துலாம்:** முயற்சிகளில் இழுபறி உண்டாகும். அரசு வழியில் பிரச்சினைகள் உருவாகும். எச்சரிக்கை தேவை. எதிர்பார்ப்புத் தள்ளிப் போகும். அரசு சம்பந்தப்பட்ட செயல்களில் எச்சரிக்கையும் கவனமும் தேவை.

**விருச்சிகம்:** அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் இழுபறி உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை. தேவையற்ற பிரச்சினைகள் தோன்றும். வழக்கு விவகாரங்களில் நன்மை உண்டாகாமல் போகும்.

**தனுசு:** தம்பதியருக்குள் பிரச்சினை மறையும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான நாள். சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள். நண்பரால் நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மகரம்:** முயற்சியில் இருந்த தடை விலகும். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். வழக்கத்தை விட செயலில் வேகம் இருக்கும். நிறைவேறாத எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**கும்பம்:** பிள்ளைகள் நலனில் ஆர்வம் கூடும். முயற்சியில் தடை உண்டாகும். செலவு அதிகரிக்கும். ஆதாயம் எதிர்பார்த்து செய்த முயற்சி நிறைவேறாமல் போகும். குடும்பத்தினர் அதிருப்தி கொள்வர்.

**மீனம்:** அலைச்சல் அதிகரிக்கும். வேலை காரணமாக சிலர் வெளியூர் செல்வர். அரசு பணியில் கவனம் தேவை. எதிர்பாராத வேலையால் நெருக்கடி ஏற்படலாம். அதிகாரிகளுடன் அனுசரித்துப் போவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிபரப்புக்கு இடையூறு மற்றொருவரும் கைது!

கொழும்பு, ஓக.23

தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து, அதன் ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இரண்டாவது நபரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சமூக செயற்பாட்டாளரான சமிந்த கெலும்பிரிய அமரசிங்க என்பவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் நேற்று கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, கடந்த ஜூலை 13ஆம் திகதி ரூப வாஹினி கலையகத்துக்குள் நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட் டில் ஆர்ப்பாட்டக்காரரான தானிஷ் அலி கைதுசெய்யப்பட்டு தற்போது, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (எ-இ)

## ஆருயிர் அண்ணன் தங்கைக்கு எமது முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

(23, 24.08.2022)

தோற்றம் 11 • 05 • 1944 — மறைவு 04 • 09 • 2021



தோற்றம் 05 • 06 • 1952 — மறைவு 03 • 09 • 2021



(CS 20440) (3/6)

அமரர் திரு. குழந்தைவேலு நடராசா (ராசு- வேலவன்ஸ்)

அமரர் திருமதி அருந்தவதேவி மாணிக்கவாசகர் (ராசா)

அன்னார்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பார்மணியம் வீதி, விராங்கொடை, தெல்லிப்பளை கிழக்கு.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் அன்புச் சகோதரர்கள், பெறாமக்கள், மருமக்கள்

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 05 - 1945



மறைவு 22 - 08 - 2022

### தங்கவடிவேலு பரமேஸ்வரி

தாவளை இயற்றாலை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவடிவேலு பரமேஸ்வரி நேற்று (22.08.2022) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ர புத்திரியும், காலஞ்சென்ற மயில்வாகனம் செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் தங்கவடிவேலு அவர்களின் அன்பு மனைவியும், விஜிதா, விஜயானந்தா (பிரான்ஸ்), விஜோஜிதா (ஜேர்மனி), விஜயலலிதா (கனடா), விஜயரூபன் (ஜேர்மன்), விஜயசங்கர் (அப்பன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திரபாலன், தர்சினி (பிரான்ஸ்), இராசலிங்கம் (ஜேர்மனி), கிருபாகரன் (கனடா), வினோதினி (ஜேர்மனி), மாலதி (ஆசிரியை - யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரணவநாத் (UK), கோபிநாத் (SLTC - North East Developer), பிரதீபன், ஹம்சா, ராகவி, தாமிரன், ஆதவன், சரண், ரிஷி, அனுஷா, யதுஷா, கபிஷன், அபிநயன், அபிஷன், அகல்யன், தலோமிகா, கஜானி, அஹர்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் சிவலோகதேவியின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான பொ.லோகேஸ்வரன், பொ.மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை, இயற்றாலை, கொடிகாமம்.

தகவல்: குடும்பத்தினர். 077 234 3124

# பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதாகக்கூறி அரசியல் நெருக்கடியை உருவாக்கக்கூடாது

## சந்திரகுமார் வலியுறுத்து

கிளிநொச்சி, ஓக. 23

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதாகக்கூறி, அரசியல் நெருக்கடியை உருவாக்க முயலக்கூடாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ளார் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக ரீதியில் போராடுவோரை அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களால் சிறையில் அடைப்பது தவறு. அப்படிச் செய்தால் அது நாட்டில் மிக மோசமான எதிர்விளைவுகளையே உண்டாக்கும்.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு மறுவளத்தில் அரசியல் நெருக்கடியை உருவாக்கக்கூடாது.

அப்படிச் செய்தால் அதற்காக மிகப்பெரிய விலையை நாடு செலுத்த வேண்டியிருக்கும். கடந்த கால அனுபவத்தை மீட்டுப் பார்த்தால் இதனைப் புரிந்துகொள்ளமுடியும்.

ஜனநாயகப் போராட்டங்களுக்கு இடமளித்தால் வன்முறைச் செயற்பாடுகளோ அதற்கான சூழலோ உருவாகாது. ஆகவே அரசாங்கம் அத்தகைய தவறுகளுக்கு இடமளிக்காமல், செயற்படுவது அவசியமாகும். எனவே ஜனநாயக வழியில் போராடியோரைச் சிறையில் அடைத்துப் பழிவாங்குவதை விடுத்து உரியவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் மக்கள் நிலை நின்று பகிரங்கமாக முன்வைத்த கோரிக்கைகளின் நியாயத்தன்மையைப் புரிந்துகொண்டு நாட்டின் நெருக் கடியைத் தீர்ப்பதே மிகப் பொருத்தமான வழிமுறையாகும்- என்றுள்ளது. (ம-214)

## தேவை

வீட்டு வேலைக்கு சமையல் தெரிந்த பணிப்பெண் தேவை. உடுவில் சுன்னாகம் பகுதியில் விரும்பத்தக்கது. (CS 20437) (3/6) 077 582 8826


## கட்டட நிர்மாண வேலைகள்

வீடுகள், கடைகள், மதில் வேலைகள் கட்டடங்கள் புனரமைத்தல், மாபிள் வேலைகள், நிலப்பபதிப்பு கற்கல் போன்ற வேலைகள் சிறந்த முறையில் காலதாமதிமின்றி செய்து தரப்படும். (CS 20180) (3/6)

புத்தூர். 076 371 3128

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 • 08 • 1934



இறப்பு 01 • 09 • 2013

### அமரர் கைலாயபிள்ளை சிவலிங்கம்

திதி: துவாதசி

வருடங்கள் பல தோன்றி மறைந்து சென்ற போதிலும்
எங்கள் மனங்களில் தாங்கள் என்றென்றும் பசுமையாக
வாழ்ந்து வருகின்றீர்கள் தங்களுடனான
எங்கள் இனிமையான வாழ்வு மீண்டும் வராதோ
என எண்ணித் தவிக்கின்றோம். (CS 46060) (3/6)

கதிரிப்பாய், அச்சுவேலி. மனைவி, பிள்ளைகள்.

LINGAA Fashion
லிங்கா பெஷன்

நல்லூர் அலங்காரக் கந்தன் உற்சவ காலத்தில்
புத்தாடை புது வரவுகளை
10 - 50% வரை
விலைக் கழிவுகளுடன்
அள்ளிச் செல்ல இன்றே விரையுங்கள்.





நல்லூரில் ஆடைகளின் சாம்ராஜ்யம்

லிங்கா பெஷன்
Whatsapp - 076 644 0722
Tel : 021 221 4999
www.lingaa.lk
www.fb.com / lingaa.lk
No. 302A, TEMPLE ROAD, NALLUR, JAFFNA.
(CR 37056) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கியின் 200 நாட்கள் நிலையான வைப்புக்கு



22.5% வரை

23.75% (வ.உ.வ)

அதிக வட்டி

200 நாள் நிலையான வைப்பு

500,000/- ரூபாயால் ஆரம்பிக்கப்படும் 200 நாட்கள் நிலையான வைப்பு

- சந்தைப் பெறுமதியிலும் அதிக வட்டியோடு பல நன்மைகள்
- அதிஉயர் நம்பிக்கையும் பாதுகாப்பும்

| வைப்பின் பெறுமதி (ரூ.) | காலஎல்லை (நாட்கள்) | வட்டிவீதம் (வ.வ) | வ.உ.வ |
|---|---|---|---|
| 500,000 - 1,499,999 | | 20.5% | 21.54% |
| 1,500,000 - 2,499,999 | 200 | 21.5% | 22.65% |
| 2,500,000 அல்லது அதற்கு மேல் | | 22.5% | 23.75% |

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து அல்லது 1975 க்கு அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

1975 BOC CALL CENTRE www.boc.lk

AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# ஒவ்வொரு வாரமும் 1,500 தொற்றாளர்கள்

## தீவிரமடைகின்றது டெங்கு

கொழும்பு, ஓக. 23

வாரம் ஒன்றுக்கு பதிவாகும் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500ஆக அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இந்த வருடத்தில் இதுவரை 50 ஆயிரத்து 500 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கண்டி, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் கணிசமான அளவு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

டெங்கு, கொரோனா மற்றும் இன்புளுவென்சா ஆகியவை தற்போது பரவி வரும் நிலையில், அறிகுறிகள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். மருத்துவ ஆலோசனைகளைத் தாமதிக்காது பெறவேண்டும். மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் முழுமையான இரத்தப் பரிசோதனையை மேற்கொள்வது அவசியம் - என்றார். (எ-இ)

# மக்கள் ஆதரவிருந்தால் சிறிதேவி மீண்டும் வரும்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 23

**பொதுமக்கள் ரயில் போக்குவரத்தில் ஆர்வம் காட்டும் பட்சத்தில், தற்போது நிறுத்தப்பட்டுள்ள 'சிறிதேவி' ரயில் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கமுடியும் என்று தெரிவித்தார் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன.**

யாழ்ப்பாணத்துக்கான இரு நாள் உத்தியோகபூர்வப் பயணமொன்றை மேற்கொண்ட அவர், நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாற்றில் முதல் தடவையாக யாழ் மக்களை கருத்திற் கொண்டு அதிகளவான ரயில் சேவைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளோம். கே.கே.எஸ். - அறிவியல் நகருக்கான 'யாழ் ராணி', தடைப்பட்டிருந்த இரவு தபால் சேவை மீள ஆரம்பம், உத்தரதேவி மற்றும் கடுகதி சேவைகளின் தரிப்பிட நிலையங்களை அதிகரித்துள்ளமை உள்ளிட்டவற்றை செயற்படுத்தியுள்ளோம். இவற்றுடன், யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசிய பொருள்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக சரக்கு ரயில் சேவைகளை பயன்படுத்தும் திட்ட முன்மொழிவுகள் ரயில்வே திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இதனடிப்படையில் இந்த சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

மேலும், முல்லைத்தீவு, வவுனியா, மற்றும் அநுராதபுர மாவட்ட பணியாளர்கள், பல்கலை மாணவர்களைக் கருத்திற் கொண்டு, ஓமந்தை - அறிவியல் நகர் ரயில் சேவையை முன்னெடுக்கவுள்ளோம். தடைப்பட்டுள்ள 'சிறிதேவி' சேவையை மீள ஆரம்பிப்பதற்கு, பயணிகளின் ஆதரவை எதிர்பார்த்துள்ளோம். அதிகளவு பயணிகள் பயணிப்பார்கள் என்றால் அந்தச்சேவை மீளவும் ஆரம்பிக்கப்படும் - என்றார்.(ம-27)

# வவுனியாவில் டெங்கை கட்டுப்படுத்த சோதனை



வவுனியா, ஓக. 23

வவுனியாவில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் முகமாக பரிசோதனை நடவடிக்கைகளில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர். வவுனியாவில் அண்மைக்காலமாக பெய்துவரும் மழையால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனையடுத்து வீடுகள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் உள்ளிட்ட பல இடங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

அதன்படி நேற்றையதினம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்கள், வங்கிகள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் பொதுமக்கள் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி தத்தம் இருப்பிடங்களை சுத்தமாக வைத்திருக்குமாறும் இல்லாவிடின் சிவப்பு எச்சரிக்கை ஒட்டப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (ச-18)

# மாணவர்களுக்கென பாதுகாப்புக் கடவை

## வலி.மேற்கு பிரதேசசபையின் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 23

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு சைக்கிளில் செல்லும் மாணவர்களுக்கு சைக்கிள் விசேட கடவை அமைப்பதற்குரிய திட்டமொன்று வலி.மேற்கு பிரதேசசபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்த கலந்துரையாடல் வலி.மேற்கு பிரதேசசபையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே பிரதேசசபையின் தவிசாளர் த.நடனேந்திரன் இவ்வாறான திட்டத்தை முன்வைத்தார்.

பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களில் நடந்து செல்வோரும் சைக்கிளில் செல்வோரும் பாதசாரிக் கடவையூடாகக் கடக்கின்றபோது நெரிசலுக்குட்பட்டு சில விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு ஏற்படும் விபத்துச் சம்பவங்களைத் தடுக்கும் முகமாக பிரதான வீதியிலுள்ள பாடசாலைகளின் எல்லையருகே கொங்கிறீற்றிலான கூம்புகளை அமைத்து (சிறப்புப் பாதுகாப்புக் கடவை) சைக்கிளில் வரும் மாணவர்கள் அதனூடாக பாடசாலைக்குள் செல்ல முடியும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு குறித்த திட்டம் சபையின் நிதியில் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் இதற்கு பிரதேசசபைக்குட்பட்ட வட்டுக்கோட்டை, இளவாலை, மானிப்பாய் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் என்றும் வலி.மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்தார். (ம-14.125)

# பரிசளிப்பு நிகழ்வு

அரச கரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய ரீதியான கட்டுரைப் போட்டியின் பரிசளிப்பு விழா, நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பத்தரமுல்ல 'வோட்டர்ஸ் ஹெட்ஜ்' விடுதியில் நடைபெறவுள்ளது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் விருந்தினராக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கினன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-14-159)

# பல்கலைக்கழகங்கள் செப்ரெம்பர் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 23

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல காரணங்களால் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமன்னிப்பு வழங்க பொருத்தமானவர் ரஞ்சன்

## ஐ.ம.ச. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க குற்றவியல் குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளியாக அறிவிக்கப்படாததால், ஜனாதிபதியின் பொது மன்னிப்புக்கு மிகவும் பொருத்தமான நபர்களில் ஒருவர் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பில் தெரிவித்ததாவது:

நடிகரும் அரசியல்வாதியுமான ரஞ்சன் ராமநாயக்க கொள்ளை அல்லது ஊழல் குற்றச்சாட்டின் பேரில் தண்டிக்கப்படவில்லை. நீதிமன்ற



அவமதிப்பு குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகள் அவர் சிறையில் இருக்கின்றார். அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவிடமும், தற்போதைய ஜனாதிபதி ரணிலிடமும் இதுதொடர்பில் நாம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ம)

# தென்னக்கோன் மீதான தாக்குதல் எட்டுப் பேருக்கு நீதிமன்று பிணை

கொழும்பு, ஓக. 23

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 8 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ம)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயம் ஆகியவற்றின் மஹா சங்காபிஷேகம் அண்மையில் சிறப்பாக இடம்பெற்று சுவாமி வீதி உலா வரும் காட்சி. (ம-14)





சாவகச்சேரி - கண்டுவிலில் அமைந்துள்ள புவேந்தர் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் நிலைய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)



சாவகச்சேரி - செருக்கல் பிள்ளையார் ஆலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு, ஆலய வீதிகள் சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் அண்மையில் சிரமதானம் செய்யப்பட்டன. (ய-9)


## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி தியாகராசா



பிறப்பு 26.10.1951 இறப்பு 22.08.2022

தேவாலய வீதி, மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி தியாகராசா அவர்கள் 22.08.2022 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா (எவெரெடி நிறுவன முன்னாள் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் மதியழகனின் (சுரேஸ்) பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மதியழகன் (சுரேஸ்) - மகன்
077 622 1881

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 07 - 1942



மறைவு 22 - 08 - 2022

### திருமதி பரமநாதன் இரத்தினம்

கோப்பாய் வடக்கு கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமநாதன் இரத்தினம் நேற்று (22.08.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா, பொன்னு ஆகியோரின் பாசமிகு மருமகளும் மோகனராசனின் பாசமிகு தாயாரும், மகிழினியின் பாசமிகு மாமியாரும், சுப்பிரமணியம், இராசமணி, இராசதுரை, சரஸ்வதி, இராசநாயகம், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் திவ்வியகரன், சாம்பவி, காருண்யா ஆகியோரின் அன்புப் பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2022) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

MPCS Lane, [illegible]
077 316 2726
077 368 3962
தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்த...

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயின் கைதுடன் அரசாங்கத்தை தொடர்புபடுத்த வேண்டாம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வசந்த முதலிகேவை தடுத்து வைக்கும் உத்தரவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திடக் கூடாது என்று மனித உரிமை பாதுகாவலர்கள் தொடர்பிலான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் மேரி லோலர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவது தொடர்பில் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பழிவாங்கும் நோக்கில் கைதுசெய்யப்படவில்லை. அவர் மீது ஏற்கனவே பல குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் உள்ளன. அவரைக் கைதுசெய்யும் உத்தரவை நீதிமன்றத்திடம் ஏற்கனவே பொலிஸார் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் முறையற்ற விதத்தில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற அவர் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். நாட்டில் அண்மையில் மக்கள் எழுச்சிப் போராட்டங்களுக்கு இடையில் தோற்றம் பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளுடன் அவர்களுக்குத் தொடர்பு உண்டா என்ற ரீதியிலும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரின் கைதுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எவரும் முடிச்சுப் போடவேண்டாம். அவர்கள் மூவரினதும் விவகாரம் தொடர்பில் நீதித்துறையே இறுதி முடிவு எடுக்கும். பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்யும்போது பயங்கரவாதத் தடைச்சட்டமும் பயன்படுத்தப்படும். இது புதிய விடயம் அல்ல - என்றார். (அ-ஒ-5-22)

## ஐ.நா.வின்...

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, செயற்பாட்டாளர் ஹஷந்த ஜீவந்த குணதிலக்க மற்றும் வண. கல்வெள சிறிதம்ம தேரர் ஆகியோரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாள்களுக்குத் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.

பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 19 பேரில் குறித்த மூவரும் அடங்குவர்.

சந்தேகநபர்களில் 15 பேர் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டனர். சந்தேகநபர் ஒருவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும், வண. கல்வெள சிறிதம்ம தேரர், ஹஷந்த ஜீவந்த குணதிலக மற்றும் வசந்த முதலிகே ஆகியோர் பிணையில் விடுவிக்கப்படவில்லை. மாறாக 72 மணிநேர தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை - வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவில் கையெழுத்திட வேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஜனாதிபதி அவ்வாறு கையெழுத்திடுவது இலங்கைக்கு இருண்ட காலமாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். அப்படியிருந்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டமை சர்வதேச சமுகத்தை கொதிப்படையச் செய்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் உடனடியாகவே கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். 'பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்காத சட்டங்களைப் பயன்படுத்துவது இலங்கையில் ஜனநாயகத்தை சிதைப்பதாகவுள்ளது. மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கும் உரிமையை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோருகின்றேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பனவும் ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் இந்த நடவடிக்கையை கண்டித்துள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடரில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5-22)

## பிள்ளையாரின்...

கடும் போட்டிகளுக்கு மத்தியில் அவை ஒரு மில்லியன் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனையாகியுள்ளன.

மாணவன் ஒருவனே அதனை நேற்று முன்தினம் ஏலத்தில் எடுத்துள்ளான். குறித்த ஏலத்தொகை ஆலயத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-110)

## இரண்டு...

வருகின்றோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணியால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பில் கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் வயிற்றுப் பிரச்சினைக்கு முதலில் நிரந்தரத் தீர்வு காணவேண்டும். அதன்பின்னரே ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் தற்போதைய அரசாங்கத்திடம் உண்டு. நானும் பெரும்பான்மைப் பலத்துடன்தான் ஜனாதிபதியாகத் தெரிவாகினேன். இந்நிலையில், தேர்தலை வைத்துப் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டிய அவசியம் இல்லை.

எந்தவொரு தேர்தலையும் மக்கள் இப்போது விரும்பவில்லை. எதிரணியிலுள்ள ஒரு சில கட்சிகள்தான் தேர்தலை விரும்புகின்றன.

முதலில் பொருளாதார நெருக்கடிக்கு ஒன்றிணைந்து தீர்வு காண முன்வருமாறு தேர்தலை விரும்பும் கட்சிகளுக்கு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (அ-ஒ-22)

## வடக்கில்...

அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாளை மறுதினம் வியாழக்கிழமையை அண்மித்து வங்காள விரிகுடாவில் காற்றுச் சுழற்சி ஏற்படும் வாய்ப்புள்ளது. அவ்வாறு காற்றுச் சுழற்சி ஏற்பட்டால் வடமாகாணம் முழுவதும் 2 ஆம் திகதி வரை கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது.

வடக்கு மாகாணத்தின் விவசாயிகள் இவ்வாண்டுக்கான பெரும்போக நெற்செய்கைக்கான ஆரம்ப நிலப் பண்படுத்தல் செயற்பாடுகளை இவ்வாரம் முதல் ஆரம்பிக்கலாம்.

நீண்ட கால வானிலை எதிர்வு கூறலின் அடிப்படையில் இவ்வாண்டும் இரண்டாவது இடைப்பருவ மற்றும் வடகீழ் பருவக்காற்று கால மழை வீழ்ச்சி சராசரியை விட சற்று அதிகமாக கிடைக்கும் வாய்ப்புள்ளது.

எனவே விவசாயிகள் தற்போதைய நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு நெற்செய்கைக்கு வாய்ப்புள்ள அனைத்து நிலங்களையும் பயன்படுத்தி நெற்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது சிறந்தது - என்று தெரிவித்துள்ளார். (அ-ஒ-159)

## நீலப் படையணி...

கள்தம்பணியைமுன்னெடுக்கவுள்ளனர் என்று யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

மாநகரசபையில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் பெருந்திருவிழாவின் இறுதி நாள்களில் அதிகளவான பத்தர்கள் கலந்து கொள்வார்கள். இதன்போது போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணிகளில் யாழ். மாநகர சபையின் நீல நிற உடை அணிந்த காவலர்கள் பணிபுரிவார்கள் - என்றார்.

2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாநகர காவல் படை உருவாக்கப்பட்டிருந்தது. அவர்களுக்குரிய சீருடை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையின் சீருடையை ஒத்ததாக இருப்பதாகத் தெரிவித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், சீருடைகளும் மீளக் கையளிக்கப்பட்டிருந்தன. (அ-ஒ-125)

## 'கோர்ன்'...

கரியங்களை ஏற்படுத்தும் விதமாக சிலர் நடந்து கொள்வது குறித்து பல தரப்பினரும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில்நேற்று திங்கட்கிழமை மாலை உற்சவத்தின் போது, ஆலயத்துக்கு வந்திருந்தோர் மத்தியில் அதிக சத்தத்தை எழுப்பும், கோர்ன்களை ஊதியவாறு சென்ற இளைஞர் குழுவொன்றை சிவில் உடையில் நின்ற பொலிஸார் மடக்கிப் பிடித்து, விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன் பின்னர் அந்தக் கோர்ன்களை பறிமுதல் செய்து, அவர்களை கடுமையாக எச்சரித்து பின்னர் பொலிஸார் விடுத்தனர்.

அதேவேளையில் மதுபோதையில் யாசகர்கள் சிலர் ஆலய சூழலில் யாசகம் பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் யாசகர்கள் சிலரையும் சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது யாசகர் ஒருவரின் உடைமையில் இருந்து, தொடுதிரை கைபேசி (ஸ்மார்ட் போன்) மீட்கப்பட்டது. கைபேசி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், அதனைப் பொலிஸார் அவரிடமே மீளக் கையளித்தனர். (அ-ஒ-26)

## கொள்ளைச்...

சேர்ந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் தமிழகத்தைச் சென்றடைந்துள்ளனர்.

தஞ்சம் கோரி சென்றவர்கள் தொடர்பில் இலங்கைப் பொலிஸார் மேற்கொண்டுள்ள விசாரணைகளின் அடிப்படையில் 16 நபர்களில் ஒருவர் கிளிநொச்சிப் பகுதியில் உள்ள நகைக்கடையை உடைத்து நகைகளைக் கொள்ளையடித்த குற்றச்செயலின் பிரதான சந்தேகநபர் எனக் கண்டறிந்துள்ளனர்.

சந்தேகநபர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ள போதும், அவர் இலங்கையில் இருந்து தமிழகம் தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-இ)

## வகுப்புத்...

இதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குறித்த இருவருக்கும் மறு அறிவித்தல் வரையில் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கும், விடுதிக்குள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## தமிழ்க...

திருகோணமலை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (அ-ஒ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்காவின் நிலைமையை புரிந்துகொள்ளுமாம் இந்தியா

## சீனக்கப்பல் விவகாரம் தொடர்பில் ஹரின் பெர்னாண்டோ கருத்து



**கொழும்பு, ஓக.23**

**சீனக்கப்பலின் சிறிலங்காப் பயணம் தொடர்பில் இந்தியா நிலைமையைப் புரிந்துகொண்டுள்ளதால், கப்பல் வருகை பெரும் இராஜதந்திர சர்ச்சையை ஏற்படுத்தாது என இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

இலங்கையின் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக இந்தியாவின் அஹமதாபாத்துக்குச் சென்றுள்ள அமைச்சர், அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சீனா இலங்கையில் பல முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. கடந்த காலங்களில் இலங்கையின் தேவைகளை புரிந்துகொண்டுள்ளது. இலங்கை ஒரு சிறிய நாடு.

அனைவருடனும் சிறந்த உறவைப் பேணுகின்றது. இந்தியா அதைப் புரிந்துகொள்ளும் என நான் நிச்சயமாக கருதுகின்றேன். இந்தியாவுடன் எங்களுக்குச் சிறந்த இராஜதந்திர உறவுகள் உள்ளன.

சிறிலங்கா ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும், இந்திய வெளிவிவகார அமைச்சருடன் தொடர்ச்சியாக தொடர்பில் உள்ளனர். இந்தியா எங்கள் நிலைமையைப் புரிந்துகொள்கின்றது என நான் கருதுகின்றேன்- என்றார். (எ-இ)

# ஜெஹான் அப்புஹாமி மன்றில் சரணடைந்தார்

கொழும்பு, ஓக. 23

ஜெஹான் அப்புஹாமி கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்டத்தின்போது ஜெஹான் அப்புஹாமி, பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிச்சென்றார் என்றும் நேற்றுமுன்தினம்வரை அவரைப் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

பொலிஸாரின் அறிக்கையை அடுத்து ஜெஹான் அப்புஹாமியின் கடவுச்சீட்டை தடைசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் நீதிமன்ற உத்தரவை மீறியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஜெஹான் அப்புஹாமி, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுச் சரணடைந்துள்ளார்.

அதனையடுத்து 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகளில் ஜெஹான் அப்புஹாமியை விடுதலை செய்யுமாறு கோட்டை நீதிவான் திலினே கமகே உத்தரவிட்டுள்ளார். (ம-14.இ)

# கடந்த ஒரு வாரத்தில் 46 லட்சம் பேருக்கு எரிபொருள் வழங்கல்

கொழும்பு, ஓக. 23

கடந்த 15ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரையான ஒரு வாரத்துக்குள் 46 லட்சத்துக்கும் அதிகமானோர் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையின் கீழ் எரிபொருளைப் பெற்றுள்ளனர் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அத்தோடு தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தில் 60 லட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

கிளிநொச்சி, ஓக. 23

பளை- இந்திராபுரம் கிராமத்தில் வசிக்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. அத்துடன் கிராமத்தில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு குடைகளும் வழங்கப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனத்தால் குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-14,9)

# பொலிஸ் அதிகாரி உள்ளிட்டோர் ம.உ.ஆணைக்குழுவுக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 23

கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 20 அதிகாரிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு நேற்று அழைக்கப்பட்டனர்.

அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ருஹுணு பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கத் தலைவர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைவாக குறித்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இதேவேளை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் மேலும் சில அமைப்புக்களின் அங்கத்தவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-14.இ)

# கற்பகப்பிள்ளையாருக்கு இன்று கொடியேற்றம்

வட்டு. வடக்கு பிரமனாச்சி தோட்ட கற்பகப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று மு.ப. 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

10 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாக்களில் 9ஆம் நாளான 31ஆம் திகதி புதன்கிழமை ஆவணிச் சதுர்த்தியன்று தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆலயத்தின் கணேசகுண்டம் தீர்த்தக் கேணியில் பெருமான் தீர்த்தமாடுதலும் நடைபெறவுள்ளது.







நல்லூர் கந்தசுவாமி கோவில் வேல்விமான உற்சவம்(தங்கரதம்) நேற்று மாலை இடம் பெற்றது.
(படம் ஐ.சிவசாந்தன்)


**காணி விற்பனைக்கு**

யாழ் நாவற்குழியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள். களஞ்சியசாலைகள். மண்டபாங்கள். வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.